# நானாட்டான் பிரதேச சபை

## மன்னார் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 08 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 26 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 மே 11 இல் சபையின் தலைவரிற்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய நானாட்டான் பிரதேச சபையானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் தலைவரிற்கு சமர்ப்பிக்கப்பட்ட என்னுடைய அறிக்கையுடன் தொடர்புபட்ட விடயங்களினால் நிதிக் கூற்றுக்களின் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைய நானாட்டான் பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்டுத்தப்பட்டிருக்கவிலை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | பொறுப்புக்கள் | | செலவினம் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 40,646 | 01 | 315,000 |
| தவறான வகைப்படுத்தல் | | | 01 | 5,300 |

### 1.3.3. இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககள்

கட்டுப்பாட்டுக் கணக்குகளின்படி நிலுவையிலுள்ள உத்தியோகத்தர் கடன் மீதி ரூபா 3,634,222 ஆன அதேநேரம் உப பதிவேடுகளின்படி அந்தக் கணக்குளின் மொத்த மீதி ரூபா 3,614,671 ஆகும்.

### 1.3.4 கணககாய்விற்கான சான்றுகளின்மை

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்காமை**

ரூபா 4,431,653 மொத்தமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக வேண்டப்பட்ட தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 1.3.5 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| 1988 இன் பிரதேச நிதி மற்றும் நிர்வாக விதிகள் | |
| (i) அத்தியாயம் III இன் 65 ஆம் பிரிவு | வருமான எழுதுனரால் காலாவதியானோர் பட்டியல் தயாரிக்கப்பட்டு அதனை செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் 66 | செயலாளரால் ரூபா 526,905 தொகையான நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | ஆம் பிரிவு | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | அத்தியாயம் V இன் 140 ஆம் பிரிவு | செயலாளரால் ரூபா 250,425 தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் மிகை ரூபா 5,338,743 ஆகும் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்திற்கு மேலாக செலவின மிகை ரூபா 3,641,523 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2011 | | |
|---|---|---|---|---|
| | **வருமான விடயம்** | **மதிப்பிடப் பட்டது** | **உள்ளபடி யானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** |
| (i) | இறைகளும் வரிகளும் | 255 | 109 | - |
| (ii) | குத்தகை வாடகைகள் | 1,710 | 6,861 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 395 | 303 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 9,466 | 9,822 | 527 |
| | மொத்தம் | 11,826 | 17,095 | 527 |

#### 2.2.2. நீதி மன்ற தண்டப்பணம்

மாகாண சபை பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் ரூபா 64,250 ஆகும்.

## 2.3 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பிரதேச சபை நிதிகளிலிருந்து ரூபா 5,300 தொகையான செலவினம் வடக்க கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் செயற்திட்டத்தின் (என்ஈஎல்எஸ்ஜபீ) கொடுப்பனவிற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132(அ) பிரிவின்படி அமைச்சரின் ஏழுத்துமூல முன்னங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரங்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| வாகன வாடகைக் கட்டணங்கள் | 4,500 |
| பிரயாணக் கோரிக்கைகள் | 800 |

## 2.4 ஒப்பந்த நிர்வாகம்

### முழுமையாக கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

பிரதேச சபையில் நிதிகள் இன்மையால் ரூபா 1,410,938 மொத்தமான 04 மூலதன வேலைகள் முற்றாக கைவிடப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் 2000 நவம்பர் 22 ஆந் திகதிய 1159/22 ஆம் இலக்க வர்தமானி அறிவித்தல்கள் என்பவற்றின்படி சபையால் பேணப்பட்ட இறைச்சிக் கடைக்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. விலங்குவதை தடுப்பபு கட்டளையின் 10 ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு மாட்டிறைச்சிக் கடை எண்ணிக்கைகளின் விரங்கள் பதிவு செய்யப்பட்டிரக்கவில்லை.

(ஆ) ஆயுர்வேதத் திணக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காத தனியார் நிறுவனங்களிடமிருந்து ரூபா 90,387 பெறுமதியான ஆயர்வேத மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ. தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சான்றிதழ் பெறாமல் பிடி காசாக ஒப்பந்தகாரருக்கு ரூபா 133,569 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

ஆ. பல ஆண்டுகளாக பிரதேச சபையால் சேகரிக்கப்பட்ட ரூபா 53,573 தொகையான பிடித்துவைத்தல் வரி மற்றும் ரூபா 247,547 தொகையான பெறுமதி சேர் வரி உள்நாட்ட இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிரக்கவில்லை, ஆனால் தற்போதைய ஆண்டின் வருமானக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 2.7 செயலாற்றல்

சபையினால் நிதியாண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் எதிபார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் அவற்றின் மீதான முன்னேற்றம் என்பவற்றினை மதிப்பிட முடியாதிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான சேகரிப்பு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) கணக்கீடு
(ஈ) மானியங்கள்
(உ) வாகனப் பயன்பாடு
(ஊ) வைப்புக்கள்
(எ) பாதீடு